. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

ஒரு விரல் புரட்சி செய்வோம்!
நம் உரிமையை நிலைநாட்டுவோம்!
-இது நமக்கான தேர்தல்-
தேர்தல் நாள் ஏப்ரல் 23

தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 06.04.2026 • மலர் 04 • இதழ்: 95 • Edition : Nagercoil • 06.04.2026 • Vol : 04 • Issue : 95 • Page : 4 • Rs. 5/-

# விருதுநகர் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி திருநகர்

## தமிழக முதல்வர் பேச்சு



விருதுநகர்; மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றித் திருநகர்! மு.க.ஸ்டாலின்

சென்னை, ஏப்.6

தமிழகமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

சொன்னதைச் செய்யும் ஆற்றல் தி.மு.க.வுக்கே உள்ளது. அதனால்தான், 8000 ரூபாய் இல்லத்தரசி கூப்பன், இருமடங்காகும் உரிமைத்தொகை தொடங்கி, நமது சூப்பர்ஸ்டார் திமுக தேர்தல் அறிக்கை2026இல்சொல்லப்பட்டுள்ள வாக்குறுதிகள் அத்தனையும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளன.

கட்சியின் கொள்கை என்னவென்றே தெரியாமல்,

கூவத்தூரில் அடித்த காற்றில் கால்களை வாரிவிட்டு மேலே வந்துவிட்ட பழனிசாமி, நாவடக்கமின்றி அவதூறுகளையும் வாட்ஸ்அப் வதந்திகளையும் வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறார்.

அவருக்கான பதிலடி பேரடியாக விழும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராணிப்பேட்டை தொகுதி திமுக வேட்பாளர் திடீர் மாற்றம்

### ஆர்.காந்தி இன்று மனு தாக்கல் செய்கிறார்




சென்னை, ஏப். 6

ராணிப்பேட்டை தொகுதியில் 1996, 2006, 2016, 2021 ஆகிய தேர்தல்களில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் ஆர்.காந்தி. தற்போது அமைச்சராக இருக்கும் இவருக்கு 80 வயது ஆகிறது எனவே, அவரது வயோதிகத்தை கருத்தில் கொண்டு, 2026 சட்டசபைத் தேர்தலில் போட்டியிட அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. அமைச்சர் காந்திக்கு பதிலாக அவருடைய மகன் வினோத் காந்திக்கு இந்த முறை திமுக சீட் வழங்கியுள்ளது. ஆனால், மகனுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும் அமைச்சர் ஆர். காந்தி அதிருப்தியில் இருந்து வந்துள்ளார்.

திமுகதலைமையிடம் தொடர்ந்து தனக்கு சீட்டு வழங்கும்படி கோரிக்கை விடுத்து வந்தார். அமைச்சர் ஆர்.காந்தி சீட் கேட்டு விடாப்பிடியாக இருந்ததால் அவருடைய மகன் வினோத் காந்தியால் வேட்பு மனு தாக்கல் செய்ய முடியவில்லை. இந்த நிலையில் இன்று வேட்பு மனு தாக்களுக்கு கடைசி நாளாகும். தற்போது, திமுக தலைமை ஆர். காந்தியையே தேர்தலில் போட்டியிட வைக்க முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. வேட்பு மனு தாக்கல் செய்யும்போது கட்சி சார்பில் வழங்கப்படும் 'பி' பார்ம் தற்போது அமைச்சர் காந்தி இடம் வழங்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. எனவே, இன்று மனுதாக்கலின் போது அமைச்சர் காந்தியே வேட்புமனு தாக்கல் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ராணிப்பேட்டை தொகுதி முழுவதும் திமுக வேட்பாளர் ஆர்.காந்தி தான் என்று சுவர் விளம்பரங்களும் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மத்திய கிழக்கில் சிக்கிய 345 மீனவர்கள் மீட்பு

### பிரதமருக்கு நன்றி தெரிவித்த வானதி சீனிவாசன்



சென்னை, ஏப். 6

பாஜக தேசிய மகளிரணி தலைவரும், கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளருமான வானதி சீனிவாசன் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது;

போர் நடைபெறும் மத்திய கிழக்கு நாடுகளில் தவித்து வந்த 327 இந்திய தமிழ் மீனவர்கள் உட்பட 345 இதர இந்திய மீனவர்களை பத்திரமாக மீட்டு தாயகம் திரும்பச் செய்துள்ள நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரான்இஸ்ரேல் போரினால் பல்வேறு உலக நாடுகள் செய்வதறியாது தவித்து வரும் வேளையில், உள்நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடின்றி கட்டுக்கோப்பாகநிர்வகித்துவருவதோடு, வெளிநாடுகளில் சிக்கியிருந்த 6 லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியர்களைப் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வந்திருப்பது நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் நனிசிறந்த தலைமைப் பண்பை எடுத்தியம்புகிறது என்று சொன்னால் அது மிகையாகாது!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதுரையில் வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா?



மதுரை, ஏப். 6

தமிழக சட்டசபை தேர்தல் வருகிற 23ந்தேதி நடைபெற உள்ளது. பணம் பட்டுவாடாவை தடுக்க தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஆங்காங்கே ஈடுபட்டு வருகின்றனர்

இந்நிலையில் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கருப்பாயூரணி பகுதியில் பிரசாரத்திற்கு வந்த கட்சியினர் அந்த பகுதி பெண்களுக்கு தலா ரூ.200 கொடுத்தனர். இதனை யாரோ ஒருவர் செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டார். தற்போது அந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. ஆனால் இதுவரை தேர்தல் அதிகாரிகள் மற்றும் போலீசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வளர்ச்சியடைந்த பாரதத்தின் பாதை வளர்ச்சியடைந்த தமிழ்நாடு வழியாக செல்கிறது

### கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர்

சென்னை, ஏப். 6

தமிழக கவர்னர் மாளிகையின் அதிகாரப்பூர்வ எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், அவர்கள் இன்று கோயம்புத்தூரில் உள்ள சுவாமி விவேகானந்தர் இரத்த வங்கி மையத்தினை பார்வையிட்டார். மேலும் இரத்த வங்கி மையத்தின் வசதிகளை பார்வையிட்டு, இரத்த சேகரிப்பு, பரிசோதனை மற்றும் விநியோக செயல்முறைகள் குறித்து கேட்டறிந்தார். தன்னார்வ இரத்த தானத்தை ஊக்குவிக்கும் இவர்களின் அர்ப்பணிப்பான சேவையை அவர் பாராட்டினார். மேலும், ஏழை மக்களுக்கு இலவசமாக பரிசோதிக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பான இரத்தத்தை வழங்கி, பல நோயாளிகளுக்கு பெரும் பலன் அளித்து வருவதாக கூறினார்.

சுவாமி விவேகானந்தர் இரத்த வங்கி மையத்தின் மனிதநேய சேவையை கவர்னர் பாராட்டினார், மேலும் உயிர் காக்கும் இத்தகைய முயற்சிகளில் பொதுமக்கள் அதிகளவில் பங்கேற்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

பின்னர் ஆர்ய வைத்ய பார்மசியில் நடைபெற்ற பல்வேறு துறைகளில் செயல்படும் சேவா தன்னார்வலர்களின் கூட்டத்தில் சிறப்புரை வழங்கினார்.

2047இல் வளர்ச்சியடைந்த பாரதம் மற்றும் காசநோய் இல்லா பாரதம் நோக்கங்களை அடைய அனைவரும் ஒருங்கிணைந்த முயற்சி மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார். மேலும், கர்ப்பப்பை புற்றுநோய் தடுப்பூசி குறித்து விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டிய அவசியத்தையும் கூறினார். வளர்ச்சியடைந்த பாரதம் நோக்கை அடையும் பாதை, வளர்ச்சியடைந்த தமிழ்நாடு வழியாக செல்கிறது என கவர்னர் தெரிவித்தார். மேலும் நாட்டை கட்டியெழுப்பும் பணிகளில் தொடர்ந்த சேவையும், சமூக பங்கேற்பும் அவசியம் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறு தெரிவித்தார்.

## சென்னையில் இன்று விஜய் பரப்புரைக்கு அனுமதி கிடைப்பதில் சிக்கல்



சென்னை, ஏப். 6

தமிழக சட்டசபை தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. இந்த சட்டசபை தேர்தலில் தவெக 234 தொகுதிகளிலும் தனித்து களம் காண்கிறது. தவெக தலைவர் விஜய் சென்னை, திருச்சி, புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு சென்று வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்து வருகிறார்.

தமிழக சட்டசபை தேர்தல் களம் பரபரப்புகளுக்கும்விறுவிறுப்புகளுக்கும் பஞ்சமில்லாமல் சென்று கொண்டிருக்கிறது இந்தநிலையில்,

சென்னையில் நாளை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பரப்புரைக்கு அனுமதி கிடைப்பதில் சிக்கல் எனதகவல் வெளியாகி உள்ளது.விஜய் சார்பில் நாளை வில்லிவாக்கம், அண்ணாநகர், விருகம்பாக்கம், தியாகராய நகர் ஆகிய 4 தொகுதிகளில் பிரசாரம் செய்ய அனுமதி கேட்கப்பட்டுள்ள நிலையில் தற்போது வரை அனுமதி கிடைக்கவில்லை.

காவல்துறைதரப்பில்வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட சிட்கோ நகரில் மட்டும் பேசுவதற்கும்,

மற்ற இடங்களில் பேச அனுமதி வழங்க முடியாது எனவும் தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தி.நகரில் விஜய் வருகையால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படும். எனவே அனுமதி வழங்க முடியாத நிலை உள்ளதாக கூறப்படுகிறது. அதேசமயம் 4 இடங்களிலும் அனுமதி வேண்டும் என தொடர்ந்து தவெகவின் மாவட்ட நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

### தேர்தல் பிரசாரத்திற்கு இடையே வெள்ளகோவில் அருகே

## சாலையோர கடையில் தேநீர் அருந்திய கனிமொழி



திருப்பூர், ஏப். 6

2026 தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகள் தீவிர தேர்தல் பிரசார பணியில் ஈடுபட்டு வருகின்றன.

திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக்கூட்டணி வேட்பாளர்களுக்கு, பொதுமக்களிடம் வாக்கு சேகரித்து வருகிறார்.இந்த நிலையில், திருப்பூர் மாவட்டம் காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பிரசாரத்தை முடித்துக்கொண்டு, பல்லடம் செல்லும் வழியில் வெள்ளகோவில் அருகே ஓலப்பாளையம் ஊராட்சியில் உள்ள சாலையோர கடையில் கனிமொழி கருணாநிதி எம்.பி தேநீர் அருந்தினார்.

அவருடன் காங்கேயம் திமுக வேட்பாளரும், துணைப் பொதுச் செயலாளருமான மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் இல. பத்மநாபன், அமைச்சர் கயல்விழி செல்வராஜ், திமுக மாணவர் அணி செயலாளர் வீரமணி ஜெயகுமார், திமுக மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

கம்மவான்பேட்டை ஊராட்சி மன்றம் மற்றும் சென்னை அரவிந்த் கண் மருத்துவமனையின்

# இலவச கண் புரை அறுவை சிகிச்சை முகாம்



வேலூர் : ஏப்ர06

ஸ்ரீ சக்தி வேல்முருகன் திருக்கோயில் அறக்கட்டளை கம்மவான் பேட்டை ஊராட்சி மன்றம் மற்றும் சென்னை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் புரை அறுவை சிகிச்சை முகாம் கம்மவான்பேட்டை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

ஊராட்சி மன்ற தலைவர் கவிதா முருகன் தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர் ஜெயலட்சுமி ஏழுமலை ஊராட்சி மன்ற துணைத் தலைவர் லோகலட்சுமி குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த கண்புரை அறுவை சிகிச்சை முகாமில் அனைவருக்கும் இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு தேவைப்படும் நபர்களுக்கு கண்ணாடி வழங்கப்பட்டது

. மேலும் ரத்த அழுத்தம் சர்க்கரை நோய் பரிசோதனையும் செய்யப்பட்டு கண்புரை அறுவை சிகிச்சைக்கான ஆய்வுகள் செய்யப்பட்டன. மேலும் அறுவை சிகிச்சை செய்யப்படுபவர்களுக்கு உணவு இடம் அளித்து கட்டணம் இன்றி பாதுகாப்பாக சென்னை அழைத்து சென்று அறுவை சிகிச்சை செய்ய போவதாக தெரிவித்தனர். இம்முகாமில் ஊர் முக்கியஸ்தர்கள் விஸ்வநாதன் தவமணி ஆகியோர் வாழ்த்தி பேசினர். முகாமில் மருத்துவர்கள் ஸ்ரீவன்சன் மற்றும் நியாயா ஆகியோர் பொது மக்களுக்கு பரிசோதனை மேற்கொண்டனர். மருத்துவமனையின் சார்பில் முகாம் ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீனிவாசன் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் செயலாளருடன் இணைந்து அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில்

# திமுக கழக நிர்வாகிகளை சந்தித்து ஆதரவு திரட்டிய ஆற்காடு தொகுதி திமுக வேட்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன்



வேலூர் : ஏப் 6

மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் ஆற்காடு சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகளை மரியாதை நிமித்தமாக சந்தித்தார். சலமநத்தம், கம்மவான் பேட்டை, கம்மசமுத்திரம், மோத்தக்கல் உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளுக்கு சென்றார்.

இதில் கணியம்பாடி ஒன்றிய திமுக செயலாளர் விபிஎஸ்.கலைச்சந்தர், ஊராட்சி ஒன்றிய சேர்மன் திவ்யா கமல் பிரசாத், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவா, இளைஞர் அணி செயலாளர் பாலாஜி, சலமநத்தம் ஊராட்சி மன்ற தலைவர் ராணி சந்திரபாபு மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் கூட்டணி கட்சியினர் மற்றும் ஊர் பெரியவர்களை சந்தித்து ஆதரவு திரட்டினார்.

# தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

## ஆ. மணி எம் பி பங்கேற்பு



தருமபுரி ஏப்ரல் 6

தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில்தருமபுரிகிழக்குமாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி தலைமையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அரூர் திமுக வேட்பாளர் சண்முகம்,தருமபுரி தேமுதிக வேட்பாளர் டாக்டர். இளங்கோவன், தொகுதி பார்வையாளர்கள் செங்குட்டுவன்,சத்தியமூர்த்தி,நகர செயலாளர்கள் நாட்டான். மாது,எம்.பி.கௌதம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வருகின்ற சட்டசபை பொதுத்தேர்தலில் தருமபுரி, பென்னாகரம் மற்றும் அரூர் ஆகிய சட்டசபை தொகுதிகளில் போட்டியிடும் ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சி வேட்பாளர்களை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும். அனைத்து தொகுதிகளிலும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் ஒருங்கிணைந்து தீவிர களப்பணி ஆற்றி தேமுதிக வேட்பாளரை அமோக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த கூட்டத்தில் காங்கிரஸ் மாவட்ட தலைவர் சிற்றரசு, தேமுதிக மாவட்ட செயலாளர்கள் குமார், விஜய சங்கர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர்கலைச்செல்வன், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சிசுபாலன், மதிமுக மாவட்ட செயலாளர் ராமதாஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள் பாண்டியன், சாக்கன் சர்மா, கருப்பண்ணன், திராவிட கழகம் மாநில நிர்வாகி ஜெயராமன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மணவாளக்குறிச்சி அருகே

# கொத்தனார் கத்தி குத்து; ஒருவர் மீது வழக்கு

குளச்சல், ஏப்.6

மணவாளக்குறிச்சி பகுதியை சேர்ந்தவர் பிரேமன் ( 53). கொத்தனார். இவர் கடந்த மூன்று வருடங்களாக அதே பகுதியில் புதிய வீடு கட்டி வசித்து வருகிறார். பிரேமனின் உறவினரான மணிகண்டன் என்பவரும் அதே பகுதியில் வசித்து வருகிறார். இந்த நிலையில் பிரேமன் வீட்டிற்கு மணிகண்டன் வீட்டை தாண்டி தான் செல்ல வேண்டும். இதனால் இருவருக்கும் இடையே பாதை தகராறு இருந்து வந்தது.

சம்பவ தினம் பிரேமன் அந்த பாதை வழியாக நடந்து சென்றார். அப்போது அங்கு வந்த மணிகண்டனுக்கும் பிரேமனுக்கும் தகராறு ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த மணிகண்டன் தான் வைத்திருந்த கத்தியால் பிரேமனின் கழுத்தில் குத்தினார். இதில் படுகாயம் அடைந்து சத்தம் போட்டவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு ராஜாக்கமங்கலத்தில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இது குறித்த புகாரின் பேரில் மனவளக்குறிச்சி போலீசார் மணிகண்டன் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

களியக்காவிளையில்

# ஆட்டோ டிரைவரை தாக்கி கொலை மிரட்டல்; ஒருவர் கைது

களியக்காவிளை, ஏப்.6

களியக்காவிளை அருகே மேக்கோடு பகுதியை ஜஸ்டின் டார்வின் (41). இவர் களியக்காவிளை பஸ் நிலையம் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் டிரைவர் ஆக பணி செய்து வருகிறார். சம்போதனம் இவர் ஆட்டோ நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது, பனங்காலை என்ற பகுதியை சேர்ந்த கொத்தனாரான ஆல்பின்(34) என்பவர்அங்கு வந்து, மற்றொரு ஆட்டோ டிரைவரான மணி என்பவரிடம் மது வேண்டும் என கேட்டுள்ளார். அதற்கு ஜஸ்டின் டார்வின் இங்கு மது இல்லை என்றும் ஆட்டோ மட்டும் தான் உள்ளது என பதில் கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த ஆல்வின் தான் வைத்திருந்த இரும்பு கம்பை எடுத்து ஜஸ்டின் டார்வினைசரமாரியாகதாக்கினார். இதில் படுகாயம் அடைந்தவரைமீட்டஅக்கம்பக்கத்தினர்குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து ஜஸ்டின் டார்வின் மனைவி விஜி (36) என்பவர் களியக்காவிளை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து ஆல்வினை பிடித்து விசாரித்த போது அவர் மீது ஏற்கனவே பல வழக்குகள் இருந்தது தெரிவந்தது. இதை எடுத்து அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# திருப்பூர் மாநகராட்சி மேயர் தனது பதவியை ராஜினாமா செய்தார்




திருப்பூர்:ஏப் 6

நடைபெற்று முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் திருப்பூர் மாநகராட்சியின் 49 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு மாமன்ற உறுப்பினர்களின் பேராதரோடு மேயராக பதவி வகித்து வந்த. ந.தினேஷ்குமார் தனது மாமன்ற உறுப்பினர் பதவி மேயர் பதவியை ராஜினாமா செய்தார்!!

அவிநாசி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடக் கூடிய இந்தத் தேர்தல் ஜனநாயக ரீதியாக நடைபெற வேண்டுமென்றால் மத்திய அமைச்சராக இருக்கக்கூடிய இணை அமைச்சர் எல் முருகன் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவாரா! ஒரு ஏழை கூலி தொழிலாளி உடைய மகள் மத்திய அமைச்சரை எதிர்த்து போட்டியிடுகிறார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் திருப்பூர் மாநகராட்சி பல்வேறு உள்கட்டமைப்பு பணிகளுடன் பணிகள் செய்து இருக்கிறோம் என்று பெருமிதம் கொள்கிறேன் எனக்கூறினார். குறிப்பாக திருப்பூர் பகுதிகளில் பல்வேறு பிரச்சனைகளை கையாண்டு 1300 கிலோ மீட்டர் தார் சாலைகளை மறு சீரமைப்பு செய்துள்ளோம் குடிநீர் விநியோகத்தை மூன்று நாட்களுக்கு ஒரு முறை பொதுமக்களுக்கு வழங்குவதை முறைப்படுத்தி உள்ளோம் 13000 தெரு விளக்குகள் மாநகராட்சிக்குட்பட்ட 136 பள்ளிகளில் 234 வகுப்பறைகள் அதேபோன்று மழை நீர் வடிகால் பணிகள் குறிப்பாக 30,40,ஆண்டுகளாக தீர்க்கப்படாத திருப்பூர் மாநகராட்சி குப்பை பிரச்சனைக்கு குட்பைசொல்லி உள்ளது.

இன்னும் 40,50,ஆண்டுகளில் மக்களுடைய எதிர்பார்ப்புகளை தேவைகளை தேவைகளுக்கு அடித்தளம் அமைத்துள்ளோம் குப்பை பிரச்சனைக்கு பல்வேறு தீர்மானங்கள் மாநகராட்சி மூலம் தீர்க்கப்பட்டுள்ளது மத்திய அரசு திருப்பூர் மாநகராட்சிக்கு இரண்டு விருதுகளை கொடுத்துள்ளது. என தெரிவித்தார்.

குளச்சலில் தேர்தல் விதிமீறல்

# பாஜ வேட்பாளர் உட்பட 55 பேர் மீது வழக்கு

குளச்சல், ஏப். 6

தமிழக சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு வாக்கு சேகரிப்பில் அனைத்து கட்சி வேட்பாளர்களும் முழு கவனம் செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில் குளச்சல் பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளர் சிவகுமார் மற்றும் அவருடன் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சேர்ந்து நேற்று முன்தினம் மாலை குளச்சல் அண்ணா சிலை சந்திப்பில் தொடங்கி பொதுமக்களிடம் வாக்கு சேரிப்பில் ஈடுபட்டனர். பின்னர் ஊர்வலமாக காமராஜர் பேருந்து நிலையம், காந்தி சந்திப்பு பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

தேர்தல் விதிமுறைப்படி வாக்கு சேகரிப்பு பிரச்சாரத்தில் வேட்பாளர்கள் உட்பட 5 பேர் மட்டுமே செல்ல வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில் வாக்கு சேகரிப்பில் 100க்கும் மேற்பட்டோர் சென்றதாக குளச்சல் போலீசருக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில் அங்கு சென்ற போலீசார் தேர்தல் விதிமீறல் குறித்து கூறினர். பின்னர் குளச்சல் தொகுதி பாஜக வேட்பாளர் சிவகுமார், நகர பாஜக தலைவர் சதீஷ் பாரதி, செயலாளர் பிரேம்ஜித் கவுதம், இந்து முன்னணி மாவட்ட உறுப்பினர் பிரதீப் மற்றும் வக்கீல் மகேஷ் உட்பட 55 பேர் மீது தேர்தல் விதிமீறல் வழக்கு பதிவு செய்தனர்.

பர்கூரில்

# அதிமுக வேட்பாளர் இ.சி கோவிந்தராசன் வேட்புமனு தாக்கல்



கிருஷ்ணகிரி, ஏப். 6

பர்கூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் அதிமுக வேட்பாளர் இ.சி கோவிந்தராசன் வேட்புமனு தாக்கல் செய்தார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் இ.சி கோவிந்தராசன்தேர்தல்விதிமுறைக்கு உட்பட்டு தனது வேட்புமனுவை தேர்தல் நடத்தும் அலுவலர் அபிநயா அவர்களிடம் வழங்கினார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.வி ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் கிருஷ்ணன், திருமால், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ். எம் மாதையன், பா.ஜ.க மாவட்ட தலைவர் கவியரசு, முன்னாள் மாவட்ட தலைவர் சிவப்பிரகாசம், நாகோஜனஹள்ளி பேரூர் கழக செயலாளர் அண்ணாதுரை, ஒன்றிய பொருளாளர் பழனி உள்ளிட்ட அனைத்து கூட்டணி கட்சி கழக நிர்வாகிகள் இழந்து கொண்டனர்.

பாலக்கோடு சட்டமன்ற தொகுதி

# திமுக வேட்பாளர் டி என் வி செந்தில்குமார் வேட்பு மனு தாக்கல்



தருமபுரி ஏப்ரல் 6

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.என்.வி.எஸ். செந்தில்குமார் பாலக்கோடு வட்டாச்சியர் அலுவலகத்தில் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்தார். தருமபுரி திமுக மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர். பி.பழனியப்பன் மற்றும் கூட்டணி கட்சியினர் உடனிருந்தனர்.

மார்த்தாண்டம் அருகே

# வேன் மோதி நர்ஸ் படுகாயம் டிரைவர் கைது

மார்த்தாண்டம், ஏப்.6

குழித்துறை, வட்டவிளை பகுதியை சேர்ந்தவர் ஷாஜி என்பவர் மனைவி அஜிதா (34). இவர் மார்த்தாண்டம் அருகே உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் நர்சாக பணி செய்து வருகிறார். நேற்று முன்தினம் அம்பலக்கரை பகுதி சேர்ந்த முருகன் என்பவர் ஓட்டி வந்த வேனில் வேலை செய்யும் ஆஸ்பத்திரிக்கு அஜிதா சென்றுள்ளார். அப்போது ஆஸ்பத்திரி அருகே வந்த போது வேனில் இருந்து இறங்கி முன்னோக்கி நடந்து சென்றுள்ளார். வேன் இவரை தாண்டி சென்று இடது பக்கம் திரும்பி உள்ளது.

அப்போது நடந்து சென்ற அஜிதாவின் மேல் எதிர்பாராமல் வேகமாக வேன் மோதியுள்ளது. இதில் படுகாயம் அடைந்த அஜிதாவை அக்கம் பக்கத்தினர் மீட்டு அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து அஜிதா மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் கவனக்குறைவாக வேனை ஓட்டிய முருகனை கைது செய்த போலீசார் வழக்கு பதிவு செய்து, கைது செய்து ஜாமீனில் விடுவித்தனர்.






தமிழ்நாடுசட்டமன்றபொதுத்தேர்தல்2026நடைபெறுவதைமுன்னிட்டு,கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், வாக்காளர்கள் தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.தினேஷ் குமார் விழிப்புணர்வு ஹீலியம் பலூனை மாவட்டஆட்சியர்அலுவலகத்திற்குமேல்பறக்கவிட்டார். உடன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, ஊடக மைய அலுவலர் .சு.மோகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கண்காணிப்பாளர் .சிவபிரகாசம், தேர்தல் விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர் .புவனேஸ்வரி, .சித்ரா தேவி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# திருவெண்ணெய்நல்லூரில் செயல் வீரர்கள் கூட்டம்

## திமுக நிர்வாகி பாலாஜி பாபு தலைமையில் நிர்வாகிகள் திரளாக பங்கேற்பு



திருவெண்ணெய்நல்லூர்.ஏப்.06

விழுப்புரம்மாவட்டம்திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவெண்ணெய்நல்லூரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக மேற்கு, மத்திய மற்றும் நகரம் சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பொன் கௌதமசிகா மணி கலந்து கொண்டு திமுக அதன் கூட்டணிகட்சிநிர்வாகிகள்மற்றும்பொது மக்களிடம்சிறப்புரையாற்றிஉதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார். இந்நிகழ்ச்சியில் டி.எடையார் கிராமத்தை சேர்ந்தஒன்றியவிளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், சமூக சேவகருமானபாலாஜிபாபுதலைமையில் கிளை நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.



தருமபுரி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு தேர்தலில் 100% வாக்களிப்போம் வலுவான ஜனநாயகத்தை உருவாக்குவோம் என் வாக்கு விற்பனைக்கு அல்ல என்ற அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தண்ணீர் கேன்களில் ஒட்டு வில்லைகளை ஊட்டியும், செல்பி பாயிண்டு அமைக்கப்பட்டதில் இளம் வாக்காளர்கள், கல்லூரி மாணவிகள் மற்றும் பொதுமக்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் பார்வையிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ரூபன் சங்கர் ராஜ், மகளிர்திட்ட அலுவலர் சுந்தராஜன், தருமபுரி தேர்தல் நடத்தும் அலுவலர் காயத்ரி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் சிவரஞ்சன், வட்டாட்சியர் சுகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தஞ்சாவூர் வழியாக கன்னியாகுமரிக்கு

# ஒரு புதிய எக்ஸ்பிரஸ் ரயில்; காவிரி டெல்டா ரயில் பயணிகள் சங்கத்தினர் வரவேற்பு



தஞ்சாவூர் ஏப்ரல் 6

தஞ்சாவூர் வழியாக கன்னியாகுமரிக்கு மேலும் ஒரு புதிய எக்ஸ் பிரஸ் ரயில் இயக்கப்படுகிறது .தஞ் சாவூர் வந்த ஹைதராபாத் கன்னியாகுமரி ரயிலுக்கு காவிரி டெல்டா ரயில் பயணிகள் சங்கத் தினர் வர வேற்பு அளித்தனர். தெலுங்கானா மாநிலம் ஹைதரா பாத்தில் இருந்து கன்னியாகுமரிக்கு இருமார்க்கத்திலும் புதிய வாராந்திர விரைவு ரயில் வண்டி எண் (17069 17070) ஏப்ரல் 1ஆம் தேதி முதல் இயக்கப்படும் என ரயில்வே துறை அறிவித்தது.

அதன்படி ஹைதரா பாத்தில் இருந்து புறப்பட்ட வாராந்திர விரைவு ரயில் தஞ்சாவூர் ரயில் நிலையத்திற்கு வந்தது. இந்த ரயிலுக்கு காவிரி டெல்டா ரயில் பயணிகள் சங்கம் சார்பில் தலைவர் நடராஜன், செயலாளர் வக்கீல் ஜீவகுமார், நிர்வாகிகள் பன்னீர் செல்வ ம், பேராசிரியர் திருமேனி ,வக்கீல்கள் உமர் முக்தர், ராஜேஷ் குமார், விக்ரம் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்பு அளித்தனர் பின்னர் ரெயிலை இயக்கி வந்த டிரைவர் மற்று ம் தஞ்சாவூர் ரயில் நிலைய மேலாளர் முருகானந்தம் ஆகியோருக்கு சால்வை அணிவித்து இனிப் புகள் வழங் கினர். இதையடுத்துபயணி கள் அனைவரும் இனிப் புகள் வழங்க ப்பட்டது. இந்த புதிய வாராந் திர விரைவு ரயில் ஹைதராபாத்தில் இருந்து வாரம் தோறும் புதன் மாலை4 .45 மணிக்கு புறப் பட்டுசெகந்திராபாத்,நெல்லூர்,ரேணிகுண்டா,திருப் பதி, காட்பாடி, திருவ ண்ணாமலை, விழுப் புரம், மயிலாடுதுறை கும்பகோணம், தஞ்சாவூர் ,திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோவில்பட்டி திருநெல்வேலி, நாகர்கோயில் வழியாக கன்னியா குமரிக்கு வெள்ளிக் கிழமை அதிகாலை 2.30 மணிக்கு சென்ற டையும். மறு மார்க்கமாக கன் னியாகுமரியில் இருந்து வாரம் தோறும் வெள்ளிக் கிழமை காலை 5:15 மணிக்கு புறப்பட்டு ஐதராபாத் திற்கு சனிக்கிழமை மதிய ம்2.3மணிக்கு சென்ற டையும் .இந்த ரயில் வழக்கமான கட்டண ம் தான் நிர்ணயிக்க ப்பட்டுள்ளது என்று ரயில்வே அதிகாரி கள் தெரிவித்தனர் தஞ்சாவூர் வழியாக நாகர்கோவிலுக்கு ஏற்கனவே தினமும் அந்தியோ தயா எக்ஸ் பிரஸ் மற்றும் ஞாயிற்றுக் கிழமை தோறும் புதுச்சேரி கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயில்கள் இயக் கப்பட்டு வருகி றது இந்த நிலையில் தற்போது மேலும் ஒரு புதிய எக்ஸ்பிர ஸ் ரயில் இயக்கப்ப ட்டுள்ளதால் நாகர் கோவில், கன்னி யாகுமரி மற்றும் தென் மாவட்ட ரயில் பயணிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து ள்ளனர்.

### சமூக நல அமைப்புகள் சார்பில்

# உடுமலை சட்டமன்ற தொகுதி சுயேட்சை வேட்பாளர் சா. காளிமுத்து வேட்பு மனு



திருப்பூர் ஏப்:06

தமிழ்நாடு சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு,தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகள் நல சங்கம் சார்பில் உடுமலை சட்டமன்ற தொகுதி சுயேட்சை வேட்பாளராக சா. காளிமுத்து வேட்பு மனு தாக்கல் செய்தார்.

இது குறித்து பத்திரிகையாளரிடம் வேட்பாளர் கூறுகையில்: உடுமலை சட்டமன்ற தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுகிறேன்.

குறிப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு பல சலுகைகள் வழங்கினாலும் இன்னும் பல இடங்களில் அவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதில்லை தேர்தல் பரப்புரையில் கூட அவர்களை பயன்படுத்துவதில்லை எனவே இந்த தேர்தலில் எனக்கு ஆதரவாக மாற்றுத் திறனாளிகள் பரப்புரையில் ஈடுபட உள்ளனர்.

பொதுமக்களுக்கு அந்தந்த பகுதிகளில் என்ன தேவையோ அதை பொதுமக்களிடமே கேட்டு பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி தீர்வு காண உள்ளோம். விவசாயிகள்தங்களின்விளை நிலங்களில் விளையும் பொருட்களுக்கு ஆதார விலையை அவர்களே நிர்ணயம் செய்து நேரடியாக சந்தைப்படுத்துவதற்கான கொள்முதல் மையம் அமைக்கப்பட உள்ளோம்.

தேர்தல் பரப்புரையில் விவசாயம், பெண்கல்வி, மாற்றுத்திறனாளிகள் நலன், இளைஞர்கள் வேலை வாய்ப்பு, மக்கள் அடிப்படை வசதிக்கான திட்டங்களை என தினம் ஒரு தலைப்பில் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளோம் என கூறினார்.



திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதியில் அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக கூட்டணி கட்சியான அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தேளிகாளிமுத்து திருப்பூர் மாநகராட்சியில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் எம்.பி. அமீத் IAS அவர்களிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

# விவிடி சிக்னல் பகுதியிலிருந்து புதிய வடிவமைப்பில் பாலம் கட்டப்படும்: கீதாஜீவன் பேட்டி



தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி வேட்பாளரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான அமைச்சர் கீதாஜீவன் நேற்று மாலை கலைஞர் அரங்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பல்வேறு முக்கிய அறிவிப்புகள் மற்றும் அரசியல் கருத்துகளை வெளியிட்டார். கூட்டணி கட்சிதலைவர்கள்மற்றும்நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

செய்தியாளர்களிடம் அமைச்சர் கீதாஜீவன் பேசியதாவது: நம்முடைய தேர்தல் அறிக்கையே இந்த தேர்தலின் சூப்பர் ஸ்டார். மக்களுக்கு நேரடியாக பயன்படும் பல திட்டங்களை கொண்டு வந்துள்ளோம். அதில் முக்கியமாக, பெண்களுக்கு ₹8000 மதிப்புள்ள கூப்பன் வழங்கப்படும். இந்த கூப்பன் மூலம் அவர்கள் அருகிலுள்ள கடைகளில் தேவையான பொருட்களைவாங்கிக்கொள்ளலாம்.மேலும், பெண்கள் நலத்திட்டங்கள் குறித்து பேசுகையில், மகளிர் உரிமைத் தொகை முறையாக வழங்கப்பட்டு வருகிறது. அதை ₹2000 ஆக உயர்த்த உள்ளோம். மாற்றுத்திறனாளிகளுக்கு ₹2500, முதியோருக்கு ₹2000 வழங்கப்படும். மீனவர்கள் நலத்திட்டங்கள் குறித்தும் அவர் விளக்கமளித்து, மீன்பிடித் தடை கால உதவித்தொகை ₹500 இலிருந்து ₹8000 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது அதை ₹12000 ஆக மேலும்உயர்த்ததிட்டமிட்டுள்ளோம். நகர்ப்புற வளர்ச்சி திட்டங்கள் குறித்து, இணைப்பு சாலைகள், அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்படும். வி.வி.டி.சிக்னல் மேம்பாலம் அமைப்பதில் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் விவிடி சிக்னல் பகுதியில் புதிய வடிவமைப்பில் பாலம் கட்டப்படும். வேலை வாய்ப்பு குறித்து, பர்னிச்சர் பார்க் திட்டம் விரைவில் நிறைவு பெறும். அதே பகுதியில் வின் பாஸ்ட் கார் நிறுவனம் தொடங்கப்பட்டு, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாகி வருகின்றன. அரசியல் விமர்சனங்களில், பெண்களை மதிக்க தெரியாத கூட்டம் தான் அதிமுக. ஜெயலலிதா போன்ற பெண் தலைவரை கொண்ட கட்சி என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். என்னையோ, கனிமொழியையோ இழிவாக பேசுபவர்களுக்கு பதில் சொல்ல விரும்பவில்லை அதிமுக வேட்பாளர் சி.த. செல்லப்பாண்டியன் குறித்து, அவரது பேச்சு தரக்குறைவானது. மக்கள் அதற்கு தகுந்த பதில் தருவார்கள். மழைக்காலங்களில் நான் நேரில் சென்று பணியாற்றியதை மக்கள் அறிவார்கள்.

மேலும், வரும் ஏப்ரல் 12ஆம் தேதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தூத்துக்குடி வந்து 6 தொகுதி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்ய உள்ளார் என்றார்.

### தஞ்சாவூரில்

# பெண்களுக்கு சிறப்பு விருது மூத்த குடிமக்கள் நலச்சங்கம் வழங்கியது




தஞ்சாவூர் .ஏப்ரல் 6

தஞ்சாவூரில் மூத்த குடி மக்கள் நல சங்க கூட்டம் நடை பெற்றது கூட்டத்திற்கு தென்னை விஞ்ஞானி செல்வம் தலைமை தாங்கினார் . புலவர்.ஆதி.நெடுஞ்செழியன், மகளிர் அணி துணைதலைவி கோமதி, மரியஸ் டெல்லா ஆகி யோர் முன்னிலை வகித்தனர் .அமைப்பு செயலர் அய்யனாபுரம் நட ராஜன் அனைவரை யும் வரவேற்றார் பொதுச் செயலாளர் பாஸ்கர் பொருளாளர் கண்டி மூத்து ஆகியோர் அறிக்கை வாசித்தனர். இதில் மானசா (வெல் ஜோன் நிறுவனம்), நல்லாசிரியர் கோமதி, ஊடகத் துறை அலுவலர் ஜெயப்பிரியா, அரசு டாக்டர் சிந்துஜா ஆகியோருக்குசிறப்புவிருதுகளைதுணை மேயர்டாக்டர்அஞ்சுகம்பூபதிவழங்கினார் மேலும் பலருக்கு நினை வு பரிசு வழங்கப்பட்டது இதில் பாரத் கல்வியியல் கல்லூரி முதல்வர் சுபத் திரா கலந்து கொண்டு பேசினார். சிறப்பு விருந்தினராக டாக்டர் தாமரைச்செல்வி கலந்து கொண்டார்.சங்க துணை தலைவர் முத்துக்குமரன், இணை செயலர் சுந்தர் ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர் . பயணிகள் நிழலகங்களை சீரமைக்கவேண்டும், பெரிய கோயில் அகழிகளை தூய்மைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பாக செயல்வீரர்கள் கூட்டம்




குளச்சல் ஏப் 06,

கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் நடத்தும்அண்ணல் நபியே அழகிய முன்மாதிரி பத்து மாத செயல்திட்டம் தொடர்பாக செயல்வீரர்கள், வீராங்கனைகள் கூட்டம் மாவட்ட தலைவர் முஹம்மது ஹுசைன் தலைமையில் குளச்சல் சுகந்தம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த செயல்வீரர்கள் கூட்டத்திற்க்கு சிறப்பு அழைப்பாளராக மாநில தணிக்கை குழு தலைவர் எம்.எஸ்.சுலைமான் அண்ணல் நபியே அழகிய முன்மாதிரி பத்து மாத செயல்திட்டத்தில் ஒவ்வொரு மாதமும் செய்ய வேண்டிய பணிகள் குறித்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மக்களுக்கு விளக்கஉரையாற்றினார்.அதைதொடர்ந்து மாநில பேச்சாளர் அப்துல் ரஹ்மான் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் தவ்ஹீத் ஜமாஅத் மாவட்ட செயலாளர் செய்யது அகமது கரீம், பொருளாளர் யாசிர், துணை தலைவர் நபில் அஹ்மத், துணை செயலாளர்கள் முகம்மது ராபி, யஹ்யா, ஆசிக் உசேன், முபாரக்ஷா மற்றும் அனைத்து கிளை நிர்வாகிகள், பெண்கள் தஃவா குழு பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் ஆண்கள், பெண்கள் என 300 க்கும் மேற்ப்பட்டோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தின் ஐந்துதீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டது.

### பேச்சிப்பாறையில்

# கேரள தோட்டத் தொழிலாளி திடீர் சாவு

மார்த்தாண்டம், ஏப்.6

கேரள மாநிலம், திருவனந்தபுரம் அருகே விதுர என்ற பகுதியை சேர்ந்தவர் கிரி (46). இவருக்கு திருமணம் ஆகி மனைவி மற்றும் ஒரு குழந்தை உள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் மனைவி குழந்தையை பிரிந்து வாழ்ந்து வந்த கிரி, நீண்ட காலமாக பேச்சிப்பாறை பகுதியில் தனியார் ரப்பர் தோட்டங்களில் தங்கி வேலை செய்து வந்துள்ளார். இந்த நிலையில் பேச்சிப்பறை அருகே நடனம்பொற்றை என்ற பகுதியில் வைத்து கிரிக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கேயே தரையில் படுத்து உள்ளார். நீண்ட நேரம் ஆகியும் அவர் எழும்பாததால் அப்பகுதியினர் சென்று பார்த்த போது எந்தவித சலனமும் இன்றி இறந்த நிலையில் கிடந்துள்ளார். உடனடியாக அப்பகுதியினர் பேச்சிப்பாறை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் வந்து உடலை மீட்டு குமரி அரசு மருத்துவ கல்லூரி மரு த்துவ மனைக்குஅனுப்பிவைத்தனர்.தொடர்ந்து கிரியின் உறவினர்கள் குறித்து விசாரித்து, அவர்களுக்கு தகவல் தெரிவிக்கும் முயற்சியில் போலீசார் ஈடுபட்டு வருகின்றனர்.

### அயன்கரிசகுளத்தில்

# விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி முதல் வாக்கு சாவடி

## அதிமுக வேட்பாளர் சத்யா வாக்கு சேகரிப்பு.



விளாத்திகுளம் ஏப்ரல்

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிசார்பில் அதிமுக வேட்பாளராக போட்டியிடும் சத்யா விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியின் முதல் வாக்குச்சாவடியான அயன்கரிசல்குளம் கிராமத்தில் உள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோவிலில் சுவாமி தரிசனம் செய்த பின் தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். அதனைத் தொடர்ந்து வேட்பாளர் பேசுகையில் நான் உங்கள் சகோதரியாக உங்கள் வீட்டுப் பிள்ளையாக என்றென்றும் இருப்பேன்,நான் எப்போதும் உங்களுக்காக விளாத்திகுளத்தில் இருப்பேன்,எங்கள் குடும்பம் அதிமுகவிற்கு 50 ஆண்டுகள் பணியாற்றி வந்துள்ளது,நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு என்றும் நான் செவி சாய்ப்பேன் என்று அழகாபுரி,வெம்பூர், மாவில்பட்டி, மெட்டில்பட்டி,பெருமாள் கோவில்பட்டி உள்ளிட்ட கிராமப் பகுதிகளில் இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பன், அதிமுக புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் தனவதி, புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் தனஞ்செயன்,விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் மகேஷ்,தெற்கு ஒன்றிய செயலாளர் ராமச்சந்திரன், விளாத்திகுளம் கிழக்குஒன்றியசெயலாளர்பால்ராஜ்,மாநிலபொதுக்குழு உறுப்பினர் ராமச்சந்திரன்,மாவட்ட தகவல் தொழில்நுட்பபிரிவுதலைவர்மோகன், சிறுபான்மை பிரிவு சதீஷ், முன்னாள் கவுன்சிலர் விஜயகுமார்,பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட செயலாளர் சரவணா கிருஷ்ணன்,கந்தசாமி மற்றும் கூட்டணி கட்சியினர் என பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் தெற்கு தொகுதியில்

# முன்னாள்மேயர் ந. தினேஷ்குமார் தீவிர வாக்கு சேகரிப்பு

திருப்பூர் ஏப்06

திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக வேட்பாளராக முன்னாள்மேயர் தினேஷ்குமார் போட்டியிடுகிறார். அதனைத் தொடர்ந்து இன்று காலை கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் நஞ்சப்பா அரசு மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் நடை பயிற்சி மேற்கொள்ளும் வாக்காளர்களிடம் வாக்கு சேகரித்தார். அதனைத் தொடர்ந்து குமரன் ரோடு, கேத்தரின் சர்ச், கோர்ட்டு வீதியில் உள்ள டி.சி.இ.எல். அருள் நாதர் ஆலயம், மற்றும் அவிநாசி சாலையில் உள்ள சி.எஸ்.ஐ. தூய பவுல் ஆலயம் உள்ளிட்ட இடங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு திமுகவின் சாதனை விளக்க துண்டு நோட்டீஸ் வழங்கி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்..

## கடலோர மக்கள் வளர்ச்சி மன்ற நிர்வாகிகளுடன்

# குளச்சல் காங்கிரஸ் வேட்பாளர் ஆலோசனைக்கூட்டம்




நாகர்கோவில், ஏப்.6

குளச்சல் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளராக தாரகை கத்பர்ட் போட்டியிடுகிறார். இவர் நாகர்கோவிலில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட கடலோர மக்கள் வளர்ச்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைகூட்டத்தில் நேற்று கலந்துகொண்டார்.

கூட்டத்தில் கடலோர மக்களான மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களின் குறைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று அதற்கு உடனடி தீர்வு காணவும், மேலும் அவர்களின் முன்னேற்றம் குறித்தும் இந்த கூட்டத்தில் அவர் மன்ற நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் கடலோர மக்கள் வளர்ச்சி மன்ற நிர்வாகிகள், காங்கிரஸ் கட்சியினர், மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## விளவங்கோடு தொகுதி மக்களின் விருப்பப் படி

# பாஜவில் போட்டியிடுகிறேன்; விஜயதரணி பேட்டி



மார்த்தாண்டம், ஏப்.6

விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் கட்சியில் 3 முறை எம்எல்ஏ வாக இருந்து, அங்கிருந்து விலகி பாஜ க வில் இணைந்தவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விஜயதரணி. அவருக்கு இந்த தேர்தலில் அதே தொகுதியில் போட்டியிட பாரதிய ஜனதா கட்சி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர் மார்த்தாண்டம் பாஜக கட்சி அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறியதாவது:

காங்கிரஸ் கட்சியில் இருந்து வந்த அழுத்தத்தின் காரணமாக நான் அந்த கட்சியில் இருந்து விலகி, பாரதிய ஜனதா கட்சியில் சேர்ந்த 2 ஆண்டுகள் எந்த பொறுப்பும் இல்லாமல் காத்திருந்தேன். இதை தொடர்ந்து தற்பொழுது பாரதிய ஜனதா கட்சி எனக்கு விளவங்கோடு தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கியுள்ளது.

இதற்கு வாய்ப்பளித்த பிரதமர் மற்றும் பாரதியா ஜனதா கட்சியின் தலைவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் ஏற்கனவே நான் பாரதிய ஜனதா கட்சிக்கு சென்றதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் கட்சி மாறியது சரிதான் என கூறினார்கள். என்னை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் என்னை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் . உங்களுக்கு என ஒரு அங்கீகாரத்தை தர நாங்கள் உறுதியளிக்கிறோம் என கூறுகிறார்கள். இதை என்னால் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்ள முடிகிறது. நான் தொகுதி மக்களுக்கு புதியவள் அல்ல. என்னை ஜாதி மத கண்களுக்கு அப்பாற்பட்ட மக்கள் பணியாளராக 13 ஆண்டு காலம் பணி செய்ததை அவர்கள் நினைவு கூருகிறார்கள். இந்த நீண்ட பயணத்தில் என்னை போட்டியிட வைப்பது விளவங்கோடு தொகுதி மக்கள் தான். அவர்களின் ஆசைக்காக தான் நான் இங்கு சீட்டை கேட்டு பெற்றேன். கட்சியும் அதை அங்கீகரித்து இருக்கிறது. காங்கிரஸ் கட்சி சார்பில் என்னை எதிர்த்து போட்டியிடும் நபர் கேரளாவில் இருந்து வரவழைக்கப்பட்ட நபர். அவருக்கு காங்கிரஸ் கட்சியினரே எதிராக உள்ளனர். அந்த வேட்பாளர் தொடர்பாக ஏராளம் புகார்கள் உள்ளன. நான் அதை கூற முடியாது. பிரச்சாரத்தில் நான் செய்த நல்லவற்றையும் என்னை எதிர்த்து நின்று போட்டியிடுகின்றவர்களின் தீயவற்றையும் தெரிவிப்போம். என கூறினார். இந்த பேட்டியின் போது மாவட்ட தலைவர் ஆர் டி சுரேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர்.செல்லகுமாருக்கு உற்சாக வரவேற்பு



கிருஷ்ணகிரி ஏப் 6

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 6 சட்டமன்ற தொகுதிகளில், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகள் திமுகவின் கூட்டணி கட்சியான காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டது. இதில்தனித்தொகுதியான ஊத்தங்கரைக்கு குப்புசாமியும், கிருஷ்ணகிரிக்கு முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.செல்லகுமார் ஆகியோரை வேட்பாளராக காங்கிரஸ் கட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்டனர். இன்று வேட்பு மனுதாக்களின் கடைசி நாள் என்பதால் கிருஷ்ணகிரிக்கு வருகை தந்த காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர்.செல்லகுமாருக்கு, முன்னாள் மாவட்டத் தலைவர் எஸ்.நடராஜன், மாநில ஒருங்கிணைப்பாளர் ஆறுமுக சுப்பிரமணி, மாவட்ட துணைத் தலைவர் பி.சி.சேகர், மாவட்ட பொருளாளர் உமர்ஜி, தொகுதி பொறுப்பாளர் ஆடிட்டர் வடிவேல் ஆகியோர் முன்னிலையில், கிருஷ்ணகிரி மாவட்ட, நகர, ஒன்றிய, வேறொரு கழக காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் சால்வை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் கிருஷ்ணகிரியில் உள்ள காமராஜர், மகாத்மா காந்தி, அறிஞர் அண்ணா, அம்பேத்கர், டாக்டர்.கலைஞர், ஆகியோரின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். அப்போது பட்டாசு வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். இந்த நிகழ்ச்சியில் முன்னாள்இளைஞர்அணிவிக்னேஷ், ஏ.ஐ.சி.சி உறுப்பினர் துரை என்கின்ற துரைசாமி நகர தலைவர் முபாரக் முன்னாள் மாவட்ட தலைவர் ஜேசுதுரைராஜ், மாவட்ட செயலாளர் ஹரி, மாவட்ட துணைத் தலைவர் விவேகானந்தன், மாவட்ட தலைவர் ஆர்.டி.ஐ சத்தியசீலன்,

வட்டாரத் தலைவர் தனஞ்ஜெயன், மாவட்ட பொதுச் செயலாளர் ஆறுமுகம், நவாப், லோகநாதன், குமார், கலை பிரிவு மாவட்ட தலைவர் கோவிந்தன், உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து கூட்டணி கட்சி தலைவர்களை சந்தித்து அவர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்து, பொதுமக்களிடம் வாக்குகளை சேகரிக்க சென்றனர்.

## ஈரானில் இருந்து குமரி திரும்பிய மீனவர்கள்

# தளவாய் சுந்தரம் எம்எல்ஏ தலைமையிலான அதிமுக குழு வரவேற்பு



நாகர்கோவில், ஏப்.6

ஈரான் அமெரிக்காமற்றும் இஸ்ரேல் இடையிலான போர் சூழலால் குமரி மாவட்டத்திலிருந்து ஈரானில் மீன் பிடிக்க சென்ற இந்திய மீனவர்கள் நாடு திரும்ப முடியாமல் தவித்தனர். இவர்களை பத்திரமாக மீட்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க தளவாய் சுந்தரம் எம்எல்ஏ ஏற்பாட்டின் பேரில் சிறப்பு குழுவினர் டெல்லி சென்று வெளியுறவு துறை அமைச்சகத்திடம் மனு அளித்தனர். அதிமுக மக்களவை குழு உறுப்பினர் தம்பி துரையும் இது தொடர்பாக மாநிலங்களவையில் வலியுறுத்தி பேசியிருந்தார்.

தொடர்ந்து ஒன்றிய அரசின் நடவடிக்கையின் பேரில் மொத்தம் 345 இந்திய மீனவர்கள் மீட்கப்பட்டனர். அவர்களில் முதற்கட்டமாக குமரி மாவட்டத்தை சேர்ந்த 175 மீனவர்கள் நேற்று முன்தினம் மாலை சிறப்பு விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்.

அவர்கள் நேற்று காலை பஸ்ஸில் நாகர்கோவில் வந்தனர். அவர்களை குமரி எல்லையில் தளவாய் சுந்தரம் எம்எல்ஏதலைமையில் அதிமுகவினர் வரவேற்றனர். இந்த நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் ராஜன். அக்ஷயா கண்ணன், சந்துரு உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## பேச்சிப்பாறையில்

# காதலி பேசாத காரணத்தால் வாலிபர் தற்கொலை



மார்த்தாண்டம், ஏப்.6

பேச்சிப்பாறை அடுத்த காந்திநகர் பகுதியை சேர்ந்தவர் மாதவன் மகன் அபி (23). 10ம் வகுப்பு வரை படித்துள்ள இவர் கேரள மாநிலத்தில் தேன் பெட்டி தொழில் செய்து வருகிறார். தற்போது ஈஸ்டர் விடுமுறைக்காக சொந்த ஊர் வந்துள்ளார். ஆனால் அவர் யாரிடமும் பேசாமல் மௌனமாக இருந்து வந்துள்ளார். விசாரித்த போது, அபி, அந்த பகுதியில் உள்ள இளம் பெண் ஒருவரை காதலித்து வந்ததாகவும், தற்போது காதலி திடீரென பேசியதை நிறுத்தியதால் மனம் சோர்ந்த நிலையில் காணப்பட்டதாகவும் தெரிய வந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெளியே சென்று விட்டு இரவில் 12 மணிக்கு வீட்டுக்கு வந்த அபி, தனக்கு சாப்பாடு வேண்டாம் என்று கூறிவிட்டு தனது படுக்கை அறைக்கு சென்றுள்ளார். நேற்று காலை வீட்டில் இருந்தவர்கள் அவரது அறையில் சென்று அழைத்த போது எந்த சத்தம் இல்லாமல் இருந்துள்ளது.

தொடர்ந்து அரைக்க தவைதிறந்துபார்த்தபோது அபி தூக்கிட்டு தொங்கி, இறந்த நிலையில் காணப்பட்டார்.

உடனடியாக பெற்றோர் பேச்சிப்பாறை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வெள்ளிச்சந்தை அருகே

# கத்தி முனையில் வாலிபரிடம் பணம் பறிப்பு ரவுடி மீது வழக்கு

குளச்சல், ஏப்.6

வெள்ளிச்சந்தை பகுதியை சேர்ந்தவர் நடராஜன் மகன் அஜித் (20 ).கூலி தொழிலாளி. நேற்று முன்தினம் அஜித் வெள்ளிச்சந்தை பகுதியில் சாலையில் நடந்து சென்று கொண்டிரு ந்தார். அப்போது சூரப்பள்ளம் பகுதியை சேர்ந்த அனித் (26) என்பவர் அஜித்தை வழிமறித்து, கத்தியை காட்டி செலவுக்கு பணம் கேட்டு மிரட்டி உள்ளார். பின்னர் அஜித் சட்டை பையில் இருந்த 470 ரூபாய் பறித்து விட்டு கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பி சென்றுள்ளார். இது குறித்து அஜித் வெள்ளிச்சந்தை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் பணம் பறித்த அனித் மீது வழக்கு பதிவு செய்து நடத்திய விசாரணையில் அனித் மீது ஏற்கனவே 5 வழக்கு நிலையில் உள்ளதும், இவர் பிரபல ரவுடி என்பதும், வெள்ளி ச்சந்தை காவல் நிலைய குற்ற சரித்திர பதிவேடு பட்டியலில் உள்ளவர் என்பதும் தெரிய வந்துள்ளது.

## கிள்ளியூர் தொகுதி

# தவெக வேட்பாளர் உட்பட 122 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஏப்.6

கிள்ளியூர் தொகுதி தவெக வேட்பாளராக ஆற்றூர் பகுதியை சேர்ந்த சபின் (32) என்பவர் தமிழக சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுகிறார். இதற்கான வேட்பு மனுவை தாக்கல் செய்ய கருங்கல் பகுதியில் இருந்து செண்டை மேளம் முழங்க பைக் மற்றும் கார்களில் ஊர்வலமாக தவெக தொண்டர்கள் சென்றனர்.

அப்போது அதிக சத்தம் எழுப்பும் ஹாரனை அடித்தபடியும் சென்றனர். பின்னர் தொலையாவட்டத்தில் அமைந்துள்ள கிள்ளியூர் தாலுகா அலுவலகத்திற்கு சென்று தேர்தல் அதிகாரி ஈஸ்வரநாதனிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

இந்த நிலையில் தேர்தல் விதிமுறைகளை மீறியதாகவும் பொது மக்களுக்கு இடையூறாக நடந்து கொண்டதாகவும் கருங்கல் போலீசார் வேட்பாளர் சபின் , பொறுப்பாளர் வாவற பகுதியை சேர்ந்த கோபால் மற்றும் 10 பெண்கள் உட்பட 122 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



கோவை வடக்கு தொகுதி திமுக வேட்பாளர் செந்தமிழ் செல்வன் காந்திமா நகர் பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். முன்னாள் அமைச்சர் வி செந்தில் பாலாஜி, பொங்கலூர் பழனிச்சாமி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்ற பிரச்சாரத்தில் பொதுமக்கள் வேட்பாளருக்கு மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர். திமுக அரசின் சாதனைகளை விளக்கி நிர்வாகிகள் தீவிரமாக வாக்கு சேகரித்தனர். உடன் மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், தாமோதரன், மணிகண்டன், எஸ் எம் பி முருகன், தளபதி கார்த்திக், ரகு, தொண்டர்கள் திரளானார் கலந்து கொண்டனர்.




தஞ்சாவூர் பெரிய கோயில் வளாகத்தில் "மெய்யின் குரல்" குறும்படம் தஞ்சாவூர் ஏப்ரல் 6. தஞ்சாவூர் பெரிய கோவில் வளாகத் தில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் அதிநவீன வீடியோ வாகனத் தில் 100 சதவீதம் தேர்தலில் வாக்க ளிக்க வலியுத்தி விழிப்புணர்வு குறும்படம் "மெய்யின் குரல்" ஒளிபரப்பப்பட்டது இந்நிகழ்ச்சியில் மாவட்டதேர்தல்அலுவலரும்மாவட்டகலெக்டர்மானபிரியங்காபங்கஜம்பார்வையிட்டார் உடன் சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை ஆட்சியர் சௌமியா , துணை ஆட்சியர் பயிற்சி கமலேஷ் ,செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பாரதி மற்றும் பலர் உள்ளனர்




தருமபுரி சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மருத்துவர் இளங்கோவன் தேமுதிக வேட்பாளரை தருமபுரி திமுக நகர செயலாளர் நாட்டான் மாது முன்னிலையில் 9 வது வார்டு கவுன்சிலர் மாதேஸ்வரன் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.தருமபுரி சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மருத்துவர் இளங்கோவன் தேமுதிக வேட்பாளரை திமுக நகர செயலாளர் நாட்டான் மாது முன்னிலையில் 9 வது வார்டு கவுன்சிலர் மாதேஸ்வரன் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். தருமபுரி நகர துணைச் செயலாளர் வ. முல்லைவேந்தன், விக்னேஷ் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.